மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராணிப்பேட்டை. வேலூர் மாவட்டம்.

முன்னிலை = திரு.தெய்வீகன், பி.ஏ., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ம் நாள் வியாழக்கிழமை

<u>ஜீவனாம்ச வழக்கு எண்.06/2020</u>

தி.சரஸ்வதி .... மனுதாரர்.

// எதிராக//

லட்சுமணன் .... எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 22.09.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள். திரு.ஜி.ஸ்ரீதரன் மற்றும் டி.பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராகவும், வாதிதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது எதிர்மனுதாரரிடமிருந்து, மனுதாரருக்கு உணவு உடை இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவினங்களுக்காக மாதம் ரூ.30,000/- வீதமும் மற்றும் மனுதாராரின் துணிமணி, மருத்துவம் மற்றும் எதிர்கால மருத்துவ செலவுகளுக்காக வேண்டியும் திருவிழா போன்ற பண்டிகையின்போது துணிமணிக்காக ஆண்டிற்கு ரூ.50,000/- ஜீவனாம்சம் அளிக்கக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

1. <u>**மனுவின் சுருக்கம் பின்வருமாறு**</u> **:-**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.04.2018-ம் தேதியன்று பெற்றோர்கள் சம்மதத்துடன் இந்து முறைபடி செய்யார் டவுன் கே.பி.எஸ் திருமண மண்டபத்தில் இனிதே திருமணம் நடைபெற்றது என்றும் திருமணத்தின் போது மனுதாரர் வீட்டில் மனுதாரரின் அப்பா விவசாயி ஆனவர் கடன் வாங்கி சீர் வரிசை சாமான்கள் 21 சவரன் தங்க நகையும், பிரிட்ஜ், கட்டில் மெத்தை, பீரோ போன்ற சீர்வரிசை சாமான்கள், வண்டிக்கும் திருமண செலவிற்கும் எதிர் மனுதாரர் குடும்பத்தார் கேட்டு கொண்டதற்கிணங்க ரூ.2 லட்சம் கொடுத்து திருமணம் நடைபெற்றது.

மனுதாரர் திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் வீட்டில் மனுதாரரும் எதிர் மனுதாரரும் 13 நாட்கள் மட்டும் எதிர் மனுதாரர் மனுதாரருடன் வசித்து விட்டு எதிர்மனுதாரர் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் எதிர்மனுதாரரின் அண்ணன் அண்ணியுடன் வசித்து வந்தார். சில மாதங்கள் மட்டும் மாமியார் வீட்டில் மனுதாரர் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தார். மேலும் மாத்திற்கு ஒரு நாள் மட்டும் எதிர் மனுதாரர் அவரது வீட்டிற்கு வந்து செல்வார் என்றும் மனுதாரர் வாழந்த சுமார் 2 மாதங்களிலேயே எதிர்மனுதார் இல்லாத சமயத்தில் வரதட்சனையாக ரூ.2 லட்சம் மனுதாரர் கொண்டுவரவேண்டும் என்று எதிர் மனுதாரரின் அப்பா நடராஜன் எதிர் மனுதாரரின் அம்மா வீரம்மாள், அண்ணன் ராஜேந்திரன், ராஜேந்திரனின் மனைவி உமா மகேஸ்வரி, எதிர் மனுதாரரின் அக்கா லட்சுமி மற்றும் மற்றொரு அக்கா உஷா, உஷாவின் கணவர் காளிமுத்து ஆகியோர் மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் பல கொடுமைகள் செய்து அடித்தும் உதைத்தும் பல கொடுமைகள் எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் உறவினர்கள் கொடுமை செய்தனர்.

மனுதாரரின் மேற்படி நபர்களால் ஏற்பட்ட பல இன்னல்களையும், கொடுமைகளையும் எதிர்மனுதாரரான கணவர் லட்சுமணனிடம் சொன்னபோது அவர் என் அக்கா மகளை எனக்கு திருமணம் செய்ய இருக்கிறார்கள் என்றும் அதனால் அப்படித்தான் செய்வார்கள் என்று சொல்லி மனுதாரரை அடித்தும் அசிங்கமாக பேசியும் மனுதாரரை நாய் என்றும், பைத்தியம் என்றும் எதிர்மனுதாரர் திட்டுவார் என்றும் மனுதாரர் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு குடும்ப நடத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அந்த சமயத்தில் எங்கும் புகார் கொடுக்காமலும் அவரது தாய் தந்தையரிடம் சொல்லாமல் பல கொடுமைகளை பொறுத்துக்கொண்டு குடும்பம் நடத்தி வந்தார்.

மனுதாரரை அவரது கணவர் எதிர் மனுதாரர் மற்றும் அவரது தாய் தந்தை மேற்படி உறவினர்கள் அடித்து அவரது தாய் வீட்டிற்கு திருமணம் நடத்த சுமார் 3 மாதங்களிலேயே துரத்திவிட்டனர் என்றும் அதிலிருந்து மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் அவரது இருவீட்டு உறவினர்கள் மற்றும் ஊர் பெரியோர்கள் ஆகியோர்கள் வரவில்லை என்றும் இதனால் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்த்து வைக்க வேண்டி இராணிப்பேட்டை அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் மனுதாரரை அவமானப்படுத்தி வந்தார்.

மனுதாரர் இந்நிலையில் திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் காவல் நிலையத்தில் கடந்த 05.11.2020 அன்று எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழவேண்டும் சேர்த்து வைக்க வேண்டும் என்று புகார் கொடுத்தார் என்றும் அந்த புகாரின் பேரில் இரு தரப்பினரையும் காவல் நிலையத்தார் வரவைத்து மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் பல மணி நேரம் சேர்ந்து வாழ வேண்டி அறிவுரை கூறினார்கள் என்றும் மனுதாரர் தனது கணவருடன் சேர்ந்துதான் வாழ்வேண் என்று சொன்னார் என்றும் அதற்கு எதிர்மனுதாரரும் அவரது உறவினர்களும் எதிர்மனுதாரரை சேர்த்து வைக்க முடியாது எங்கள் மீது வேண்டுமான கேஸ் போடுங்கள் நாங்கள் 8 பேரும் ஜெயிலுக்கு போகிறோம் என்று சொன்னார்கள்.

இல்லையேல் மனுதாரர் கழுத்தில் இருக்கும் தாலி அறுத்துக் கொடுத்தால் நாங்கள் மனுதாரருக்கு சேர வேண்டிய அனைத்து சீர்வரிசை சாமான்களையும் நகைகளையும் கொடுப்போம் அதற்கு மனுதாரர் சமரச ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்றும், தாலி அறுத்து கொடுக்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் வலுக்கட்டாயமாக வற்புறுத்தினார்கள் என்றும் மேலும் எதிர் மனுதாரரின் அக்க மகளை நாங்கள் எதிர் மனுதாரருக்கு திருமணம் செய்ய போகிறோம் என்றும் அதனால் செய்யர் கணம் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் சார்பில் எச்.எம்.ஓ.பி 19/20 வழக்கில் விவாகரத்து கொடுக்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரரும் அவரது தரப்பினரும் கூறினார்கள்.

மனுதாரர் நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்த பிறகு மனுதாரர் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்திக்கொள்கிறேன் என்று மனுதாரர் கூறினார் என்றும் எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய உறவினர்கள் வற்புறுத்தலுக்கும் சுமார் 2 ஆண்டு காலமாக எதிர்மனுதாரர் வீட்டில் இருக்கும் சீர்வரிசை சாமான்களுக்காவும் மற்றும் தங்க நகைகளுக்காகவும், ஈவு இரக்கம் மற்றும் மனிதாபிமானம் இல்லாமல் தாலி அறுத்துக்கொடுக்க வேண்டும் என எதிர்மனுதார் மற்றும் அவரது மேற்படி 7 உறவினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரர் விருப்பமே இல்லாமல் மாங்கல்யத்தை கொடுத்துவிட்டு, எதிர்மனுதாரரிடம் இருந்த தங்க நகைகளை சீர்வரிசை சாமான்கள் தற்காலிமாக பெற்று வந்தார்.

எதிர் மனுதாரர் தனியார் கம்பெனி ஓசூரில் பணிபுரிந்து கொண்டு மாதம் ரூ.50,000/- சம்பளம் பெற்று வருகிறார் என்றும் மேலும் விவசாய நிலம் மூலம் ஆண்டுக்கு ரூ.2 லட்சம் வருமானம் ஈட்டி வருகிறார் மற்றும் எதிர்மனுதாரர் தெரிந்தே நபர்களுக்கு அதிக வட்டிக்கு பணம் கொடுத்து அதன் மூலம் மாதம் ரூ.2 லட்சம் சம்பாதித்து வருகிறார் என்றும் அதுமட்டுமல்லாமல் பணிபுரிந்து வரும் தனியார் கம்பெனி மூலம் மாதத்திற்கு 4 அல்லது 5 நாட்களுக்கு வெளிமாநிலங்கள் சென்று பணிபுரிந்து அதன் மூலம் மாதம் ரூ.50,000/- சம்பாத்தித்து வருகிறார்கள்.

மனுதாரர் தற்போது தனது வயதான தாய் தந்தையுடன் தற்காலிகமாக இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட்டில் வசித்து வருகிறார் என்றும் எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவி நான் தான் என்றும் எனவே எதிர்மனுதாரர் பராமரிக்க சட்டப்படி கடமைப்பட்டவர் ஆகிறார் என்றும் எதிர்மனுதாரரின் மனைவிகான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ செலவு ஆகியவைகளுக்காக மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து வாழ்க்கை பொருளுதவி பெற்றுத்தர வேண்டி இந்த ஜீவனாம்ச மனுவை சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரர் தன்னுடைய முதல்விசாரணை சாட்சியத்தில் ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு தனது தரப்பில் 3 சான்றாவணங்கள் குறியீடு செய்துள்ளார். 27.04.2018ம் தேதியில் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரருக்கு நடந்த திருமண பத்திரிகை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் மனுதாரரும் எதிர்மனுதாரரும் திருமணத்தின் போது சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்?

4. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், தனது வாதத்தில், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.04.2018ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது என்றும் திருமணத்தின்போது

மனுதாரருக்கு பொன் நகையும் எதிர்மனுதாரருக்கு இருசக்கர வாகனம், திருமண செலவிற்காக ரூ.2,00,000/-மும், கட்டில், பீரோ மற்றும் சமையல் செய்ய தேவையான பித்தளை மற்றும் எவர்சில்வர் சீர்வரிசை சாமான்களும் எதிர்மனுதாரருக்கு சீர்வரிசையாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரரை எதிர்மனுதாரர் வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டதாகவும், மனுதாரர் எதிர்மனுதாரரை பிரிந்ததால் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் தனது தரப்பை நிருபணம் செய்ய ம.சா.ஆ1 முதல் 3 வரை ஆவணங்கள் தாக்கல் செய்து இருப்பதாகவும் வாதிட்டார்.

5. மேலும் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 27.04.2018ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது என்றும் இருவரும் சிறிது காலம் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்பதையும் மனுதாரர் நிருபித்துள்ளார். இதுநாள்வரை எதிர்மனுதாரர் மனுதாரரை பராமரிக்க தவறிவிட்டார் என்றும் தெரியவருகிறது. முடிவாக, மனுதாரர் அவருடைய வழக்கை நீருபணம் செய்துவிட்டார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. மனுதாரர் எதிர்மனுதாரரின் மனைவி என்பதாலும் அவரை பராமரிக்க தவறிவிட்டதாலும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி மனுதாரரின் வழக்கு சாட்சியத்தில் மனுதாரர் தற்போது கஷ்ட ஜீவனம் நடத்தி வருகிறார் என தெரிகிறது. மனுதாரர் அவருடைய வழக்கை நீருபணம் செய்துள்ளார். மேலும் மனுதாரருக்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ செலவு ஆகியவற்றை செய்து கொடுப்பது எதிர் மனுதாரரின் கடமை ஆகும்.

7. மேலும் எதிர் மனுதாரர் தனியார் கம்பெனி ஓசூரில் பணிபுரிந்து கொண்டு மாதம் ரூ.50,000/- சம்பளம் பெற்று வருகிறார் என்றும், மேலும் தன்னுடைய விவசாய நிலத்தின் மூலம் வருமானமாக ரூ.2,00,000/-மும் எதிர்மனுமாரர் தனக்கு தெரிந்த நபர்களுக்கு அதிக வட்டிக்கு பணம் கொடுத்து அதன் மூலம் ரூ.2,00,000/-வரையிலும் சம்பாதித்து வருகிறார் என்றும் எதிர்மனுதாரர் பணிபுரிந்து வரும் கம்பெனியினர் எதிர்மனுதாரரை மாதத்தில் 4, 5 முறை வெளிமாநிலங்குள்கு அனுப்புவதால் அதன் மூலம் ரூ.50,000/- வரை சம்பாதிக்கிறார் என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான எவ்வித ஆவணங்களையும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் மனுதாரர்கள் செலவிற்கு ரூபாய் 5,000/-ம் தேவைப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

8. எனவே மனுதாரரை பராமரிக்க எதிர்மனுதாரர் மாதம் ரூ.5,000/- பராமரிப்பு மற்றும் வாழ்வாதாரம் மற்றும் மருத்துவ செலவிற்கு உதவியாக கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

09. முடிவாக மனுதாரருக்கு மாதம் ரூ.5,000/-ம் ஜீவனாம்ச தொகையாக எதிர்மனுதாரர் வழங்க உத்திரவிடுவது நீதியின் பால் உகந்தது என்று தீர்மானிக்கின்றது.

10. மேலும் ஜுவனாம்ச தொகையானது மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து உத்தரவு பிறப்பிக்கும் நாள் வரையிலான தொகையினை மனுதாரர் தனியே மனு செய்து கொள்ள இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

11. மேலும் வழக்கின் செலவுத்தொகை ரூ.5000/-ம் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/- இ.தெய்வீகன்., பி.ஏ., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

1. ம.சா.1 திருமதி. தி.சரஸ்வதி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

1. ம.சா.ஆ.1 27.04.2018ம தேதியில் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரருக்கு நடந்த திருமண பத்திரிகை

2. ம.சா.ஆ.2 மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் போது எடுத்த புகைபடம்

3. ம.சா.ஆ.3 மனுதாரரின் ஆதார் அட்டை நகல்

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

ஓம்/-இ.தெய்வீகன்., பி.ஏ., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.